இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 18-07-2025

# வீடு தேடி வரும் முதலமைச்சர்!

தங்களது கோரிக்கைகளைச் சொல்ல அரசை நோக்கி மக்கள் வரும் காலத்தை மாற்றி, அரசே மக்களை நோக்கி வருவதைப் போல ஆக்கி இருக்கிறார் திராவிட மாடல் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**இல்லம் தேடிக் கல்வி, மக்களைத் தேடி மருத்துவம் - ஆகிய திட்டங்களின் தொடர்ச்சியாக 'மக்களைத் தேடி அரசு' வருகிறது. 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற முகாம்களின் மூலமாக ஒவ்வொரு மனிதரையும் அரசு நேரடியாகச் சந்தித்து அவர்களது கோரிக்கைகளைக் கேட்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்களே, 'மக்களோடு வாழ்' என்ற அடிப்படையில் இந்தத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.**

**அனைத்து அரசுகளும் மக்களுக்கான அரசுகள்தான். மக்களாட்சியின் இலக்கணம் என்பது அதுதான். அந்த இலக்கணத்தை நம் கண் முன் கொண்டு வந்து காட்டுவதாக 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற திட்டத்தை வடிவமைத்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.**

அரசுத் துறையின் சேவைகள் அனைத்தும், பொதுமக்களின் வீடுகளுக்கே வந்து வழங்கும் திட்டமாக இதனை உருவாக்கி இருக்கிறார் முதலமைச்சர். தமிழ்நாடு முழுவதும் கடந்த 15 ஆம் தேதியில் இருந்து இத்திட்டம்தொடங்கப்பட்டுள்ளது. சிதம்பரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அதே நேரத்தில் தமிழ்நாடு முழுவதும் 10 ஆயிரம் முகாம்கள் உருவாக்கப்பட உள்ளன. இந்த முகாமுக்கு வரும் மக்களுக்கு கையேடு வழங்கப்படும். அதன் மூலமாக தங்களுக்குத் தேவையான சேவையை மக்கள் பெறலாம். இந்த முகாமில் கலந்து கொள்ளச் சொல்லி தன்னார்வலர்கள், வீடுவீடாகச் சென்று அழைப்பு விடுப்பார்கள். முகாமில் தங்கள் கோரிக்கையைப் பதிவு செய்தால், உடனடியாகத் தீர்வு கிடைக்கும்.

சிதம்பரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் தொடங்கி வைத்த முகாமில் கலந்து கொண்டார் சபரீஷ் என்ற மாற்றுத் திறனாளி. அவருக்கு காதொலிக் கருவி வேண்டும் என்று அந்த மாணவரின் தாய் தனது கோரிக்கையை பதிவு செய்தார். ஒரு மணி நேரத்தில் காதொலி கருவி அவருக்குத் தரப்பட்டது. **"ஒரு மணி நேரத்தில் கொடுத்துவிட்டார்கள். இது என் பையனுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. காதொலி கருவி எவ்வளவு தொகை என்று எனக்குத் தெரியாது. உடனடியாக வாங்கிக் கொடுத்து விட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சருக்கு நன்றி"** என்று சபரீஷின் தாய் உருக்கமாகக் குறிப்பிட்டார். அதே போலத்தான் பலருக்கும் பல சேவைகள் உடனடியாகக் கிடைத்துள்ளன.

ஒவ்வொருவரும் தங்களது சேவைகளுக்காகப் பல்வேறு அலுவலகங்களுக்கு பல நாட்கள் அலைந்து பெற வேண்டிய சேவைகளை, உடனடியாக ஒரே ஒரு முகாம் மூலமாக வழங்கி வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இதுதான், 'மக்கள் முதல்வர்' என்பதற்கான இலக்கணம் ஆகும். மக்களோடு மக்களாக இருக்கும் முதல்வர் என்பதற்கான எடுத்துக்காட்டு ஆகும்.

**சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக ஒவ்வொரு தொகுதிக்கும் சென்று மக்களின் கோரிக்கைகளை தி.மு.க. தலைவராக தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் திரட்டினார்கள். 'திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிப் பொறுப்பேற்ற 100 நாட்களில் உங்களது கோரிக்கைகள் அனைத்தையும் பரிசீலித்து சாத்தியமான அனைத்துத் திட்டத்தையும் உருவாக்கித் தருவேன்' என்று வாக்குறுதி தந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் - 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற தனித்துறையை உருவாக்கி, அவை அனைத்து வேண்டுகோள்களையும் நிறைவேற்றி வைத்த சாதனை முதலமைச்சர்தான் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். இந்த அடிப்படையில் 4 லட்சத்து 57 ஆயிரத்து 645 மனுக்களுக்குத் தீர்வு கண்டுள்ளார் முதலமைச்சர் அவர்கள்.**

அடுத்தடுத்து வரும் மனுக்களைப் பரிசீலித்து தீர்வு காண, 'முதல்வரின் முகவரி' என்ற தனித்துறையை உருவாக்கினார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இதுவரை 95 லட்சத்து 65 ஆயிரத்து 885 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இதில் 92 லட்சத்து 27 ஆயிரத்து 751 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து 'மக்களுடன் முதல்வர்' என்ற திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். தொலைபேசி மூலமாக தங்களது கோரிக்கைகளை வைக்க, 'நீங்கள் நலமா?' என்ற திட்டத்தைத் தொடங்கினார். சென்னை கோட்டூர்புரத்தில் 120 இருக்கைகளுடன் இத்திட்டம் செயல்பாட்டில் உள்ளது. அடுத்ததாக 'எளிமை ஆளுமை' என்ற திட்டத்தைத் தொடங்கினார்கள். இவை அனைத்தும் மக்களின் குறைகளைத் தீர்த்து வருகின்றன.

**தாம்பரத்தைச் சேர்ந்த ராதா என்ற பெண்மணி, "நான் பூ வியாபாரம் செய்கிறேன். எங்களுக்கென்று நிரந்தரமாக வீடு இல்லை. 'மக்களுடன் முதல்வர்' முகாம் நடப்பதாக எங்க ஏரியாவுல ஆட்டோவுல சொல்லிட்டுப் போனாங்க. நான் அங்கே போய் மனு கொடுத்தேன். உடனே எனக்கு வீடு கிடைத்துவிட்டது. ஒரே ஒரு மனு கொடுத்தேன். என் கனவு நிறைவேறிவிட்டது" என்று சொல்லி இருக்கிறார். இரண்டு மணி நேரத்தில் சாதிச் சான்றிதழ் கிடைத்துவிட்டது என்று சொல்லி இருக்கிறார் திரு.வி.க. நகர் யமுனா. "சர்க்கரை வியாதியால் பாதிக்கப்பட்ட எனக்கு மூனு வருஷத்துக்கு முன்னால் ஒரு காலை எடுத்துட்டாங்க. இந்த முகாமுக்கு போய் எழுதிப் போட்டேன். காலை அளவெடுக்க வந்தாங்க. செயற்கைக் கால் செஞ்சு கொடுத்தாங்க. மூனு வருஷம் கழிச்சு இப்ப நான் நடக்கிறேன்" என்று சொல்லி இருக்கிறார் ராணிப்பேட்டை மாவட்டம் திமிரியைச் சேர்ந்த ஜெகதீசன்.**

உங்கள் தொகுதியில் முதலமைச்சர், மக்களுடன் முதல்வர் ஆகிய திட்டங்களின் நீட்சியாக, 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தைத் தொடங்கி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். கோரிக்கைகள் கொடுப்பவர்களைப் பார்த்து எரிச்சல் அடையும் சூழ்நிலையை மாற்றி, கோரிக்கை மனுக்களைக் கேட்டு வாங்கும் அரசாக தனது அரசை மாற்றிக் காட்டி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**'ஒவ்வொரு மனிதரின் தேவையையும் கேட்டுக் கேட்டு, பார்த்துப் பார்த்து நிறைவேற்றும் அரசு இது' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வார்கள். ஒரு தந்தை மனநிலையில் ஒரு தலைவர், ஒரு முதலமைச்சர் தமிழ்நாட்டுக்குக் கிடைத்திருக்கிறார்.**



பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகைதந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (16.7.2025) பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பின்போது, முதல்வர் ரஷ்ய நாட்டுப் பயணிகளிடம் உரையாடினார்.

### சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மூலம்

## மாணவர்களின் 65 புதிய கண்டுபிடிப்புகளுக்கு ரூ. 40.50 லட்சம் பரிசு!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கி பேச்சு!

சென்னை, ஜூலை 18- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் துறையின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் மூலம் நேற்று முன்தினம் (16.7.2025) அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் துறையின் அமைச்சர் தா.மோ. அன்பரசன் மாணவர்களின் 65 புதிய கண்டுபிடிப்புகளுக்கு ரூ.40.50 லட்சம் பரிசுத் தொகை வழங்கி 2 புதிய அறிவிப்புகளை வெளியிட்டு பேசியதாவது:

"தமிழ்நாடு அரசின் EDII நிறுவனம் மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு தொழில் முனைவு பயிற்சியுடன் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்தும் விதமாக நிதி உதவிகளை அளித்து வருகிறது. இன்று இந்த விழாவில், புத்தாக்க பற்று சீட்டுதிட்டத்தின்கீழ் 15 புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கும், பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 50 மாணவ குழுக்களுக்கும் என மொத்தம் 65 புதிய கண்டுபிடிப்புக்களுக்கு ரூ.40 இலட்சத்து 50 ஆயிரம் உதவி தொகையும், பரிசுத் தொகையும், வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தப் பரிசுகளை பெறும் அரசு பள்ளி மாணவர்கள் உள்ளிட்டபுதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு என் பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று இந்த கண்காட்சியில் நம் மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புக்களான ரோபோ ரோடு ரோலர், பல்நோக்கு விவசாயக் கருவி, கப்பல் ஊழியர்களுக்கான பாதுகாப்பு பெல்ட், Sound Gun, அன்னாச்சிப்பழம் அறுவடைக் கருவி, மக்கும் தன்மை கொண்ட பிளாஸ்டிக் என பல்வேறு கண்டுபிடிப்புகள் இந்த கண்காட்சியில் இடம் பெற்றுள்ளது.

கல்வி, மருத்துவம், தொழில் துறைக்கு முக்கியத்துவம் அளித்து வரும் முதல்வர் அவர்கள் தொழில் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாற்ற பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். அதன் விளைவாக தமிழ்நாடு இன்று இந்திய அளவில் அதிக தொழில் முதலீடுகளை ஈர்த்த மாநிலங்களில் முதல் மாநிலமாக உள்ளது. பொருளாதார வளர்ச்சியில் 9.69 சதவீதம் பெற்று முதலிடத்தில் உள்ளது. புத்தாக்கத் தொழில்கள் தர வரிசையில் முதல் இடத்தில் உள்ளது. புத்தாக்க சிந்தனைக் கொண்ட நம் இளைஞர்கள் - மாணவர்களுக்கு EDII நிறுவனம் மூலம் மாவட்ட தலைநகரங்கள், கல்லூரிகள், பள்ளிகள், வட்டார அளவிலும் தொழில் முனைவு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. கழக அரசு பொறுப்பேற்ற 4 ஆண்டு காலத்தில் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 71 ஆயிரத்து 735 நபர்களுக்கு தொழில்முனைவு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு 19 ஆயிரம் நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

பள்ளி மாணவர்கள் கல்வியில் மட்டும் அல்லாமல் புதிய கண்டுப்பிடிப்புகளை உருவாக்குவதிலும் சிறந்து விளங்கவேண்டும் என்பதற்காக இந்தியாவிலேயே முதல் முறையாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் "பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தினை" அறிவித்தார். கடந்த 3 ஆண்டுகளில் 8 ஆயிரத்து 74 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு, தொழில் முனைவோர் விழிப்புணர்வு பயிற்சிகளும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் 21 லட்சத்து 86 ஆயிரம் பள்ளி மாணவ - மாணவியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. புத்தாக்க தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 6 லட்சத்து 40 ஆயிரத்து 820 கல்லூரி மாணவர்களுக்கும், அரசு கல்லூரிகளில் உள்ள Incubation Centres மூலம் 1 லட்சத்து 45 ஆயிரம் மாணவர்களுக்கும் என இதுவரை 7 லட்சத்து 85 ஆயிரம் இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு தொழில் முனைவோர் விழிப்புணர்வு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன்.

புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்க இளைஞர்களுக்கு கழக அரசு உதவி தொகையினை புத்தாக்க பற்றுச் சீட்டு திட்டத்தின் கீழ் வழங்கி வருகிறது. ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்புக்காக வழங்கப்பட்டுவரும் உதவித் தொகை நடப்பாண்டு முதல் ரூ. 2 லட்சத்திலிருந்து ரூ. 3 லட்சமாகவும், அவற்றை தயாரித்துசந்தைப்படுத்த வழங்கப்படும் உதவித்தொகை ரூ.5 லட்சத்திலிருந்து ரூ. 7 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ், 470 புதிய கண்டுப்பிடிப்பாளர்களுக்கு ரூ. 12 கோடியே 10 லட்சம் உதவி தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையில் StartUp நிறுவனங்களை உருவாக்க, புத்தொழில் முனைவோர்களுக்கு ஆதார நிதி வழங்கும் (TANSEED) திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் இது வரை169 நிறுவனங்களில் ரூ.18 கோடியே 79 லட்சம் முதலீடும், 36 SC / ST StartUp நிறுவனங்களில் ரூ.51 கோடியே 20 லட்சம் முதலீடும், ஆக மொத்தம், கடந்த 4 ஆண்டுகளில் 205 StartUp நிறுவனங்களில், ரூ. 69 கோடியே 99 லட்சம் தமிழக அரசு முதலீடு செய்துள்ளது. இந்த திட்டத்திற்காக நடப்பு நிதி நிலை அறிக்கையில், ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதல்வர் அவர்களின் சீரிய திட்டங்களால் ஆட்சி பொறுப்பேற்ற 4 ஆண்டு காலத்தில் ரூ. 2 ஆயிரத்து 20 கோடியே 96 லட்சம் மானியத்துடன், ரூ.5 ஆயிரத்து 180 கோடியே 18 லட்சம் வங்கிக் கடனுதவி வழங்கப்பட்டு, 59 ஆயிரத்து 584 நபர்கள் புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 2G, 3G, 5G என உலகம் வேகமாக முன்னேறி கொண்டிருக்கும் காலத்தில் நம் மாணவர்களும் புதிய தொழில்நு ட்பங்களை அறிந்து மக்களின் தேவையினை புரிந்து தரமான பொருட்களை குறைந்த விலையில் உருவாக்கிட வேண்டும் என கேட்டுக் கொண்டு, உங்களுக்கு தேவையான ஆலோசனைகள் பயிற்சிகள் நிதி உதவிகள் வழங்க அரசு தயாராக உள்ளது. உங்கள் புதிய கண்டுபிடிப்புகளால் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு உருதுணையாக இருந்து தமிழகத்தை முன்னேற்ற பாதைக்கு அழைத்து செல்லுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சிக்கு முன் மாணவ மாணவியர்களின் புதிக கண்டுப்பிடிப்புக்களின் கண்காட்சியினை அமைச்சர் தா.மோ. அன்பரசன் திறந்து வைத்து பார்வையிட்டார்.

### அரியலூர் மாவட்டம் - ஜெயங்கொண்டம் கிழக்கு ஒன்றிய இளைஞரணி சார்பில்

## முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாள் - கழக அரசின் சாதனை விளக்கக் கூட்டம்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், ஜூலை 18 - கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் கிழக்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் மற்றும் கழக அரசின் நான்காம் ஆண்டு சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் த.விக்னேஷ் தலைமையில் ஜெயங்கொண்டம் குறுக்குசாலையில் நடைபெற்றது.

முன்னதாக ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் த.சுபாஷ் அனைவரையும் வரவேற்றார்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ச. வசந்தபகலவன், த.குணசீலன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் செ. அருள்செல்வன், செ.சரவணன், பா.சஞ்சீவிராஜ், கு.அபிஷேக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நடைபெற்ற முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா மற்றும் கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்கப் தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தலைமைக் கழக பேச்சாளர் மு.விஜயரத்தினம், கழக இளம் பேச்சாளர் மு.ராமமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், பொதுக்குழு உறுப்பினர் சுமதி கருணாநிதி, ஒன்றிய கழக பொறுப்பாளர் நா.கணேசன், ஒன்றிய அவைத் தலைவர் இரா.குணசேகரன், மாவட்ட பொருளாளர் கு.இராஜேந்தி ரன், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.எம். அன்பழகன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் செல்வராஜ், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் எம்.ஜி.ராஜேந்திரன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் குலோத்துங்கன், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.கே.பி. சங்கரன், ராமச்சந்திரன், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பிரவீன் ராஜ், ஒன்றிய மகளிர் அணி துணை செயலாளர் சரண்யா வேல்முருகன், மாவட்ட பிரதிநிதி மகாலிங்கம், ஒன்றிய கழக நிர்வாகிகள் கே.என்.ஆர்.மதியழகன், பி.கே.டி. தனகோபால், ரமேஷ் , ராஜேந்திரன், ரவிக்குமார், மகேந்திரன், பாலமுருகன், பட்டுச்செல்வம், தம்பிதுரை, செல்வி, ரீட்டா, வீரலட்சுமி, பிரபாகரன், தமிழரசன், ராஜ யோகம், பாக்கியரத மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ர.ரமணி நன்றி கூறினார்.



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி வட்டம், வடுகபட்டி கிராமம் ஜெயராமபுரத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை சார்பில் மாவீரர் பொல்லான் அவர்களுக்கு முழு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்பட்டு வரும் பணியினை வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மொடக்குறிச்சி ஒன்றிய கழக செயலாளர் சு.குணசேகரன், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ.சுகுமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.